## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தணை ஆணைக்குழு – 2010

---

### 1. அபிப்பிரயாம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதிஉயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்தது என்றும் 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் நிலைவரம் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பனவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்காகக் கிடைக்கப்பெற்று அரச நிறுவனங்கள் தற்காலிக மிகை நிதியத்தில் (எஸ்ஐரீஎஸ்எவ்) முதலீடு செய்யப்பட்ட ரூபா 92,171,801 தொகையான பங்கிலாபங்கள் ஆண்டு முடிவில் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. ஆகையால் நிதிக் கூற்றுக்களில் செஸ் நிதியத்தின் கீழ் காட்டப்பட்ட ரூபா 360,255,392 தொகையான அரச நிறுவனங்கள் தற்காலிக நிதியத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் பெறுமதி, அரச நிறுவனங்கள் தற்காலிக மிகை நிதிய முகாமையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட ரூபா 452,427,199 தொகையான மீதியுடன் இணங்கியிருக்கவில்லை. ஆணைக்குழுவிற்கு ஆண்டின் போது கிடைத்த பங்கிலாபம் ஆண்டு முடிவில் கிடைக்க வேண்டியதாகக் காட்டப்பட்டு அடுத்த வருடத்திற்கான முதலீட்டுப் பெறுமதியில் சீராக்கம் செய்வது வழமையாகும்.

#### 1.2.2 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான பரீட்சை மீதியில் காட்டப்பட்ட ஆணைக்குழுவின் மூன்று வங்கி நடைமுறைக் கணக்குகள் தொடர்பான ரூபா 23,642,191 கூட்டு மொத்தமான மீதிகள் தவறுதலாக வங்கிக் கணக்கிணக்க கூற்றில்

ரூபா 23,435,131 ஆக எடுக்கப்பட்டிருந்தது. ஆகையால் அத்தகைய வங்கிக் கணக்குகளிற்காகத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

---

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2006 செம்தெம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க எம்எஸ்டி சுற்றுநிரூபம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2009 யூலை 08 ஆம் திகதிய பீஈடி/பீஈ சுற்றுநிரூப கடிதம் என்பவற்றின் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் 06/2006 ஆம் இலக்க சுற்றுநிரூபத்தில் குறித்துரைக்கப்பட்ட சம்பளங்கள் மற்றும் பதவியுயர்ச்சித் திட்டங்களுடன் இணங்கியதாக சகல பொது முயற்சிகளும் தங்களது ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்ச்சி நடைமுறைகளைத் தயாரிக்க வேண்டும். மேலும், ஆணைக்குழு 2009 யூலை 08 ஆம் திகதிய பீஈடி/பீஈ சுற்றுநிருப கடிதத்தினால் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறுவதற்கு வசதியாக தனது ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்ச்சி நடைமுறைகளை 2009 யூலை 30 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தியாக்கும்படி வேண்டப்பட்டிருந்தது. எனினும், பொது முயற்சிகளின் சம்பளங்கள் மற்றும் பதவியணி நிலையை மீளமைக்கும் தேசியக் கொள்கைக்கிணங்க 2011 ஏப்ரல் 30 இல் உள்ளவாறும் ஆணைக்குழுவால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், எஸ்ஈசீ போன்றவாறான ஒழுங்குபடுத்துவர்களிற்கான விசேட அமைப்புக்கு வசதியளிக்கும் முகமாக தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவிற்கு பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு பிரதிநிதித்துவப்படுத்தலை மேற்கொள்ளும் என்று ஆணைக்குழுவின் தலைவர் கருத்துரைத்திருந்தார்.

### 1.2.4 கணக்காய்விற்கான ஆவணச்சான்றுகளின்மை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிச் சேவைக் கழகத்தால் உழைக்கப்பட்ட ரூபா 14,139,970 தொகையான கருத்தரங்கு வருமானத்தை ஒவ்வொரு பங்குபற்றுனராலும் நிதி சேவை கழகத்திற்கோ அல்லது ஆணைக்குழுவின் நிதிப்பிரிவிற்கோ பாடநெறிக் கட்டணங்கள் செலுத்தப்பட்ட விபரங்களின்மையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை. ஒவ்வொரு பாட

நெறியிலிருந்தும் உழைக்கப்பட்ட வருமான விபரங்கள் தகவல் கோரப்பட்ட வேளையில் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆணைக்குழுவினால் 2010 ஏப்ரல் 19 ஆம் திகதிய தனது கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டவாறு, பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்கள் மற்றும் உதவிப்பணிப்பாளர்களிற்கான வாகனப்படிகள் அவர்களிற்கு குத்தகை வாகனத்தை பயன்படுத்தும் நன்மை கிடைக்காதவிடத்து, முறையே ரூபா 89,000 ரூபா 65,000 மற்றும் ரூபா 35,000 ஆல் அதிகரிக்கப்பட்டிருந்தன. எனினும், வாகனப் படியை அதிகரிப்பதற்கான நிதி, திட்டமிடல் அமைச்சின் அனுமதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

## 2.1 நிதிசார் மீளாய்வு

### நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள் தொழிற்பாட்டுச் செலவினத்திற்காக செஸ் நிதியத்திலிருந்தான மாற்றங்களைக் கணக்கிற்கு எடுக்க முன்னர் விளைவித்திருந்த ரூபா 191,084,798 ஆன தேறிய பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான நேரொத்த ளரூபா 174,908,861 தொகையான தேறிய பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் அது தேறிய பற்றாக்குறையில் ரூபா 16,175,937 ஆன அதிகரிப்பைக் காட்டியது. ஆண்டிற்கான செஸ் நிதியத்திலிருந்தான மாற்றங்களைக் கணக்கிற்கு எடுத்த பின்னருள்ள மீளாய்வாண்டிற்கான ரூபா 4,694,399 தொகையான தேறிய மிகையை செஸ் நிதியத்திலிருந்தான மாற்றங்களைக் கணக்கிற்கு எடுத்த பின்னருள்ள முன்னைய ஆண்டிற்கான நேரொத்த தேறிய மிகையான ரூபா 1,593,557 உடன் ஒப்பிடுகையில் அது நிதிசார் விளைவுகளில் ரூபா 3,100,842 ஆன அதிகரிப்பைக் காட்டுகின்றது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 மனித வளங்கள் முகாமைத்துவம்

(அ) ஆணைக்குழுவின் பதவி அணி, முன்னைய ஆண்டின் இறுதியில் சேவையிலிருந்த 72 உத்தியோகத்தர்களுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்

இறுதியில் 70 உத்தியோகத்தர்களைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பணிப்பாளர், சட்டம் மற்றும் வலுவூட்டல் பதவி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் வெற்றிடமாக இருந்ததுடன் அதன் பணிகள் பணிப்பாளர் நாயகத்தால் கவனிக்கப்படுகின்றன. மேலும் ஆணைக்குழு பணிப்பாளர், மனித வளங்கள் பதவியில் ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் 2010 யூலை வரை நியமித்திருந்ததுடன் அந்த பதவி பின்னர் பணிப்பாளர் நிதி மற்றும் நிருவாகத்துடன் அந்தப் பொறுப்புக்கள் இணைக்கப்பட்டதன் மூலம் இல்லாதொழிக்கப்பட்டது. மேலும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான திட்டத்தின் நடவடிக்கைகள் முற்றாகப் பூர்த்தியாக்கப்பட்டிருக்காத போதிலும் ஆணைக்குழுவின் 2006 – 2015 வரையான ஆண்டுகளுக்கான பிரதான திட்டத்தை அமுலாக்குவதற்காக 2007 இல் உருவாக்கப்பட்ட பணிப்பாளர், வெளிநாட்டு தொடர்புகள் மற்றும் சந்தை அபிவிருத்தி என்ற பதவி இல்லாதொழிக்கப்பட்டது. மேலும், முகாமையாளர்களின் இரண்டு பதவிகள் மூன்று ஆண்டுகளிற்கு மேல் வெற்றிடமாக இருந்தன.

(ஆ) 1992 மார்ச் 31 ஆம் திகதிய நிதி, திட்டமிடல் அமைச்சு செயலாளரின் கடிதத்தின்படி, மற்றைய அரசாங்க பிரமாணங்களைக் கருத்திற்கொள்ளாது ஆணைக்குழு தனது பதவியினரை நியமிப்பதற்கும் அவர்களின் சம்பளங்கள் மற்றும் வேதனங்களைத் தீர்மானிப்பதற்கும் சலுகையளிக்கப்பட்டிருந்தது. ஆணைக்குழுவானது, பதவியணியினரின் செயலாற்றலின் அடிப்படையில் 2010 ஏப்ரல் மற்றும் திசெம்பர் மாதங்களில் ரூபா 6,064,446 தொகையான வருடாந்த மிகையூதியத்தை வழங்க நடவடிக்கை எடுத்திருந்தது. மேலும், ஆணைக்குழுவின் பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதலின் பேரில் ஆணைக்குழுவின் பதவியணி உறுப்பினர்களிற்கு 2010 திசெம்பரில் ரூபா 3,269,349 தொகையான சலுகைப்படி ஒன்றும் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.2 கூட்டுத்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை எய்துவதிலான குறைபாடுகள்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(அ) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட சட்டங்களிற்கான திருத்தங்கள்.**

ஆணைக்குழுவின் 2010 தொடக்கம் 2012 வரையுள்ள ஆண்டுகளிற்கான கூட்டுத்திட்டத்தின் படி ஆணைக்குழுவின் விவகாரங்களுடன் தொடர்புபட்ட சட்டங்கள் புத்திசாதுரியத்துடன் பங்கு சந்தை நடவடிக்கைகளை மேற்பார்வை

செய்வதை ஆணைக்குழுவிற்கு இயலக் கூடியளவிற்கு திருத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இவை தொடர்பான அதிகமான நடவடிக்கைகள் 2009 இன் முதற்காலாண்டில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அவை 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெதுவான முன்னேற்றத்தையே காட்டியது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) கொழும்பு பங்கு பரிவர்த்தனையைப் பரவலாக்கும் நோக்கத்திற்காக பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தைத் திருத்துவதற்கான வரைபு விஞ்ஞாபனம் 2010 மார்ச்சில் நிதி திட்டமிடல் அமைச்சு மற்றும் சட்ட வரைஞர் திணைக்களம் என்பவற்றிக்கு அனுப்பட்டிருந்தது. பங்கு உரித்துடைமை கட்டமைப்பு பங்கு மற்றும் நிருவகித்தல் கட்டமைப்பு முதலியவை தொடர்பான விடயங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் கொழும்பு பங்கு பரிவர்த்தனையுடன் கலந்துரையாடப்பட்டிருந்தது.

(ii) மேலும் கம்பனியைப் பொறுப்பேற்றல் மற்றும் இணைத்தல் விதிக்கோவையைத் திருத்துவதற்குதவும் பிரேரணைகள் உள்நாட்டு மற்றும் சர்வதேசரீதியாக மூலதனச் சந்தையின் அண்மைய அபிவிருத்திகளுடன் இணங்கியதாக அமைக்கும் நோக்கில் விதிக்கோவையை மாற்றுவதற்காக 2009 இலிருந்து கூட்டுத்திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆணைக்குழுவால் விளக்கமளிக்கப்பட்டவாறு இலங்கை உயர் நீதிமன்றத்தின் கௌரவ நீதியரசர் ஒருவரின் வழிகாட்டலை எதிர்பார்த்தல் மற்றும் இந்த நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் தற்போது நடைமுறையிலுள்ள பொறுப்பேற்றல் மற்றும் இணைத்தல் தொடர்பான சட்டங்களில் மீளாய்வு மற்றும் ஒப்பீட்டுப் பகுப்பாய்வு நடத்துதல் போன்றவாறான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இந்த நோக்கத்திற்கான ஆலோசனைக் கட்டணங்களாக ரூபா 1,140,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், இவை தொடர்பில் ஆணைக்குழுவால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஆரம்பக் கட்டங்களிலேயே இருந்தன.

(iii) பரிமாற்று வியாபாரப்படுத்தப்பட்ட நிதிகளிற்கான விதிகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் மத்திய கருமபீட தரப்பையும் இலங்கை முதலீட்டாளர்கள் சங்கத்தையும் தாபிப்பதற்காக பிணையங்கள் மற்றும்

பரிவர்த்தனை ஆணைக்குழு அதிகாரச் சட்டத்திற்கு ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துதல் என்பவற்றுக்காக அலகு நம்பிக்கைப் பொறுப்பு விதிக் கோவையை திருத்துதல் என்றவாறான 2010 – 2012 இற்கான கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பிரேரனைகளை அமுல்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு குறைந்த முன்னேற்றத்தையே காட்டியது. பரிமாற்று வியாபாரப்படுத்தப்பட்ட நிதிகளிற்கான இறுதியாக்கப்பட்ட விதிகள் அலகு நம்பிக்கை விதிக்கோவையுடன் கூட்டிணைக்கப்பட்டு, அதனை வர்த்தகமானியில் பிரசுரிப்பதற்காக சட்ட வரைஞருக்கு அனுப்பட்டது. முதலீட்டாளர் சங்கத்தை தாபித்தல் 2010 ஆம் ஆண்டில் பிற்போடப்பட்டதுடன் 2011 ஆம் அண்டிற்கான கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்காக அனுமதிக்கப்பட்டதென தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

**(ஆ) ஆணைக்குழுவின் ஏனைய முறைமை அபிவிருத்தி**

ஆணைக்குழுவின் உள்ளக முறைமைகளை அபிவிருத்தி செய்வதற்காக 2009 இலிருந்து கூட்டுத்திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பிரேரணைகளை அமுலாக்குவதற்காக ஆணைக்குழுவின் நிதி மற்றும் நிருவகம் / மனித வளங்கள் பிரிவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மீளாய்வாண்டில் ஒரு திருப்திகரமான முன்னேற்றத்தைக் காட்டியிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) ஆணைக்குழுவின் நிருவாகக் கைநூலை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் 2009 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எனினும், கைநூலின் முதலாவது வரைபு மட்டுமே மீளாய்வாண்டில் இறுதியிலுள்ளவாறு வழங்க முடிந்திருந்தது.

(ii) 2009 ஆம் ஆண்டிலிருந்து மனிதவளங்கள் தகவல் முறைமையை அறிமுகப்படுத்துவதற்காக கூட்டுத்திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பிரேரணையை அமுலாக்குவதற்காக பயனுறுதிமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2009 இலிருந்து கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நிபுணத்து அறிவைப் பகிர்ந்து கொள்வதற்காக உள்ளக பீடத்தினை அபிவிருத்தி

செய்தல் அமைப்பு ரீதியான அபிவிருத்தி திட்டத்தை வடிவமைத்தல் மற்றும் ஊழியர் திருப்தி தொடர்பான ஆய்வினை நடாத்துதல் போன்றவாறான நடவடிக்கைகள் மேலும் பிற்போடப்பட்டிருந்தன.

**2.2.3 ஆணைக்குழுக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அமுலாக்கலில் தாமதங்கள்.**

---

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) 2007 மே 22 ஆம் திகதி நடை பெற்ற கூட்டத்தில் ஆணைக்குழு உறுப்பினர்களால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, ஆணைக்குழுவின் சந்தை அதீத மேற்பார்வை நடவடிக்கைகளை தன்னியக்கமாக்கும் முறைமையைக் கொள்வனவு செய்வதற்காக கேள்வி நடைமுறைகளினூடாகத் தெரிவு செய்யப்பட்ட ஒரு வழங்குனருக்கு 2009 திசெம்பர் 30 இல் ரூபா 7,213,638 தொகையான முற்பணத்தை ஆணைக்குழு வழங்கியிருந்தது. மேற்கொண்டிருந்தது. தெரிவு செய்யப்பட்ட வழங்ளுகுனருடன் ஆணைக்குழுவால் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி, அந்த முறைமை 2010 இன் நடுப்பகுதியில் நிறுவப்படவேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும், 2011 மே 31 இல் உள்ளவாறும் செயற்பாட்டிலிருக்கவில்லை. மேலும், 2010 செப்தெம்பரில் அந்த அதீத மேற்பார்வை முறையில் பயன்படுத்துனர் ஏற்றுக்கொள்ளல் பரீட்சையை மேற்கொள்வதற்கென ஒரு ஜஎஸ் நிபுணரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. 2011 மார்ச் 04 ஆம் திகதிய நிபுணரின் அறிக்கைப்படி, வன்பொருள் நிறுவுதல், களஞ்சிய முறைமை, பெறுநர்கள், பதவியினர் பயிற்சி முதலியவற்றில் பல்வேறு நலிவுகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. இது தொடர்பில், ஆணைக்குழுவின் தலைவர், தற்போது முறைமை செயற்பாட்டிலுள்ளதுடன், முறைமையை முன்னேற்றுதல் பூர்த்தியாக்கப்படும் வரை பழைய முறைமை மற்றும் புதிய முறைமை இரண்டும் சமாந்தரமாக செயற்படுகின்றது என்று கூறியிருந்தார்.

(ஆ) ஆணைக்குழுவானது 2010 மார்ச் 24 இல் நடைபெற்ற தனது கூட்டத்தில், மூலதன சந்தை விழிப்புணர்வு அணுகுதல் தொடர்பான ஆய்வினை மேற்கொண்டு 2010 ஒக்தோபர் அளவில் அதன் பெறுபேற்றை பிரசுரிப்பதென்றும் திர்மானித்திருந்தது. பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு ஏழு பல்கலைக்கழகங்களிருந்து தெரிவு செய்யப்பட்ட 51 பட்டதாரி மாணவர்களைப் பயன்படுத்தி இந்த ஆய்வினை மேற்கொள்வதற்காக ரூபா 1,003,000 ஆன

தொகையை செலவிட்டிருந்தது. எனினும், அந்த ஆய்வின் பெறுபேறு 2011 ஏப்ரல் 30 இல் உள்ளவாறும் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்

-------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ)

(i) ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஐக்கிய அமெரிக்காவில் முதுமானிப் பட்டப் படிப்பிற்காக எடுத்திருந்த முழுச் சம்பளத்துடனான விடுமுறைக்காக 2008 யூலை 06 இலிருந்து அமுலாகுமாறு நான்கு வருட காலத்துக்கு கட்டாய சேவை ஆற்றுவதாக ஆணைக்குழுவுடன் 2007 யூலை 05 திகதி ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தார். உடன்படிக்கையின் 7 ஆம் பந்தியின் படி, கட்டாயச் சேவை காலத்திற்கு முன்னர் இராஜினாமா செய்யப்படுவதாயின் எஸ்ஈசீ ஆல் செய்யப்பட்ட செலவின் முழுத் தொகையை அல்லது ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும் தொகையைச் மீளளிப்புச் செய்ய வேண்டிய பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஏற்படுகிறது. பெறப்பட்ட தகவல்களின் படி, உத்தியோகத்தரின் வெளிநாட்டுக் கற்கை காலத்திற்காக ஆணைக்குழுவால் ரூபா 3,024,168 தொகையான செலவுகள் செய்யப்பட்டிருந்தது. எனினும், ஆணைக்குழுவானது ரூபா 61,500 தொகையை மட்டும் அறவிட்டு 2012 யூலை 06 இல் முடிவுறும் கட்டாயச் சேவைக்காலத்திலிருந்து உத்தியோகத்தரை விடுவிப்பதென்று தீர்மானித்திருந்தது.

(ii) உடன்படிக்கையின் 03 ஆம் பந்தியில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளின் படி, கற்கைப் பாடநெறிக்காக எது வித நிதி உதவியையும் வழங்குவதற்கான கடப்பாடு ஆணைக்குழுவிற்கு இல்லாத போதிலும், 2007 யூலையில் மேற்கொண்ட பாடநெறிக் கட்டணத்திற்கான மீளளிப்பாக 2010 பெப்ரவரி 01 இல் மேற்படி உத்தியோகத்தருக்கு ரூபா 250,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) மேலும், அவர் 2010 ஏப்ரல் 30 இலிருந்து அமுலாகுமாறு பணிப்பாளர் நாயகம் என்ற நிலைக்குரிய அவரது சகல கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் பணிகள் என்பவற்றிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், 2010 மே மற்றும் யூன் மாதங்களிற்காக ரூபா 89,411 தொகையான வாகனப்படியும் சொல்லப்பட்ட அந்த அலுவலருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2002 யூன் 04 மற்றும் 2009 ஒக்தோபர் 28 இல் நடைபெற்ற கூட்டங்களில் ஆணைக்குழுவின் அங்கத்தவர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, எஸ்ஈசீ இன் பணிப்பாளர்கள் / உதவிப் பணிப்பாளர்களிற்கு ரூபா 2.5 மில்லியனான உச்ச அளவில் வாகனங்களிற்கான குத்தகை வசதிகள், குத்தகை காலத்தின் முடிவில் வாகனங்களைச் சுவிகரிப்பதாக விருப்பத் தெரிவைத் தெரிவிக்கும் பட்சத்தில் வழங்கப்பட்டது. அதேவித சலுகை ஏனைய அரச துறை நிறுவனங்களால் வழங்கப்படாதிருந்ததுடன் அதன் விளைவாக முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் பல்வேறு அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. முன்னைய கணக்காய்வு அறிக்கைககளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் மற்றும் அந்த நலிவுகளைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை என்பன கீழே தரப்பட்டுள்ளன.

(i) இந்த திட்டம் ஆணைக்குழுவின் உறுப்பினர் சபையால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக மட்டுமே அமுலாக்கப்பட்டிருந்ததுடன் அந்த வசதிக்கான நிபந்தனைகள் சம்பந்தப்பட்ட ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன. திட்டத்திற்கான ஒரு புறம்பான விதிக் கோவை குறித்துரைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) திட்டத்திற்காக நிதி, திட்டமிடல் அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) இந்தச் சலுகைகள், நிலுவையிலுள்ள குத்தகை வாடகையைச் செலுத்துவதன் மூலம குத்தகைக் காலத்தின் முடிவிலோ அல்லது குத்தகைக் காலத்திலோ வாகனத்தின் உரிமையை ஊழியர்களிற்கு மாற்றுவதற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், சலுகைக்கு தகமை பெறும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கைக்கான எல்லை தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வாகனங்களைப் பதிவு செய்யும் பதிவேடுகளின் படி, அத்தகைய குத்தகை வாகனங்கள் ஆணைக்குழுவின் பெயரின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன. எனினும், குத்தகைக்கால முடிவிலோ அல்லது எந்தச் சந்தர்ப்பத்திலும் குத்தகை வாடகையைத் தீர்ப்பதனாலோ வெளித்தரப்பாருக்கு வாகனத்தின் உரித்துடமையை மாற்றும் படி ஆணைக்குழுவைக் கோருவதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. அத்தகைய விதத்தில் 2005 ஆம் ஆண்டிலிருந்து ஐந்து வாகனங்கள் ஆணைக்குழுவிற்கு எதுவித நிதி நன்மைகளையும் பெற்றுக்கொள்ளாது வெளித்தரப்பாருக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டிருந்தன.

(ii) ஆணைக்குழுவால் ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்ட ஒரு பணிப்பாளர், 2008 யூன் மாதத்திலிருந்து இந்த வசதியையும் அனுபவித்திருந்தார். என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) பொது முயற்சிகளிற்கான குழு (சீஓபீஈ) 2010 செப்தெம்பர் 17 இல் நடைபெற்ற தனது கூட்டத்தில் வாடகை குத்தகை வசதிகள் தொடர்பாக ஒரு புறம்பான அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி, எஸ்ஈசீ க்கு பணிப்புரை விதித்திருந்தது. எனினும், இது சம்பந்தமான ஆணைக்குழுவின் கருத்துக்கள், ஒரு புறம்பான அறிக்கையாகச் சமர்ப்பிப்பதற்குப் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக ''கோப்'' இனால் வழங்கப்பட்ட பணிப்புரைகளின் பேரில் எடுக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகள் ''கோப்'' இற்கு ஆணைக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட 2010 திசெம்பர் 31 ஆம் திகதிய அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 2.2.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------

ஆணைக்குழுவானது, 2010 ஆம் ஆண்டிற்கான மூலதன பாதீட்டின் கீழ் ரூபா 497 மில்லியன் தொகையை ஒதுக்கியிருந்ததுடன் அதில் கட்டிடங்களைச் சுவிகரித்தல் மற்றும் தீவிர மேற்பார்வை முறைமைக்கான உபகரணங்களின் கொள்வனவு அலுவலக தானியங்கி மற்றும் மோட்டார் வாகனங்கள் முதலியவற்றின் கொள்வனவுகளில் தாமதம் காரணமாக ரூபா 33 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது என்று அவதானிக்கப்பட்டது. அதற்கு மேலாக ஆளணிக் கிரயம், தாபன வேலைகள், திறன்

தொழில் அபிவிருத்தி மற்றும் மூலதனச் சந்தை அபிவிருத்தி நோக்கங்கள் என்பவற்றை ஈடுசெய்வதற்காக மீண்டுவரும் பாதீட்டின் கீழ் ரூபா 287 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் உபகரணங்களின் பேணுகைக் கிரயம், காப்புறுதி, மின்சாரம், உபசரணை மற்றும் உள்நாட்டுப் பயிற்சி என்பவற்றின் செலவுகளிற்கான மேலதிகமாக பாதீடு செய்யப்பட்டமை மற்றும் மூலதனச் சந்தை அபிவிருத்தி நோக்கங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட குறைந்த எண்ணிக்கையான நடவடிக்கைகள் என்பவை காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 220 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. ஆகையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை, என்பதைக் காட்டுகின்றது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை ஆணைக்குழுவின் தலைவருக்கு 2011 மே 31 இல் அனுப்பிவைக்கப்பட்டது. குத்தகை வாகன வசதிகளை வழங்குதல் உயர் கற்கைகளிற்கான நிதி உதவி, மற்றும் பதவியினருக்கான ஏனைய நலன்புரி நன்மைகள் என்பவை தொடர்பாக நிர்வாக நடைமுறைகளைத் தாபித்தல் மற்றும் செஸ் வரி சேகரிப்பிலிருந்து கிடைத்த வருமானத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்தல், மற்றும் ஆணைக்குழுவின் நிதி சேவை கழகத்தால் நடாத்தப்படும் பாட நெறிகள் என்பவற்றில் ஆணைக்குழு கூடிய கவனம் செலுத்த வேண்டும்.